APPOLLO STUDY CENTRE

# TNPSC GROUP I MAIN EXAM 2023

# PRE-MODEL EXAM - I

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**பத்தாம் வகுப்புத் தரம்**

*கால அளவு மூன்று மணி நேரம்*
*Time Allowed: Three Hours*

*மொத்த மதிப்பெண்கள்: 100*
*Maximum Marks: 100*

---

**வினாக்களுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழில் எழுத்தில்) மட்டுமே வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions:**

- **All questions are to be attempted.**
- **The number of marks carried by a question / part is indicated against it.**
- **Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.**
- **Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.**
- **Any page or portion of the page left blank in the Question-cm-Answer Booklet must be clearly struck off.**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

**1. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. பெருமை எனும் அதிகாரத்தில் பிறப்பால் அனைவரும் சமம் என வள்ளுவர் கூறும் கருத்துகள் குறித்து – கட்டுரை வரைக.
2. திருக்குறள் 'அறன் வலியுறுத்தல்' மூலம் தமிழர்கள் அறனோடு இயைந்த வாழ்வை போற்றினர் என்பதை நிறுவுக.
3. திருவள்ளுவர் கூறும் 'வாய்மை' - கட்டுரை வரைக.
4. 'கல்வி', கல்லாமை குறித்து வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்.
5. உயிர்கள் மீது அன்பு கொள்வதை 'அன்புடைமை' வழி வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

**2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், "சாந்தோம்" என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியை கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (தமிழ்க் கையேடு – Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கும் நலம் அருளிய பெரியார் ஜி.யு. போப்.

**வினாக்கள்**

1. ஜி.யு.போப் எப்போது சென்னைக்கு வந்தார்?
2. ஜி.யு.போப் முதன் முதலாகத் தமிழ் உரையைப் படித்து சொற்பொழிவாற்றிய இடம் எது,
3. ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்கள் எவை?
4. ஐரோப்பியர் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்காக ஜி.யு. போப் எழுதிய நூல் எது?
5. ஜி.யு. போப் தமிழில் எழுதி பதிப்பித்த நூல் எது?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்கள்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

பரவலாக நீதிக்கட்சி என்று அறியப் பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் சென்னை மாகாணத்தில் செயல்பட்ட ஒரே அரசியல் கட்சி. இது 1916ம் ஆண்டு மருத்துவர் சி. நடேசனார், டி.எம். நாயர் மற்றும் பி.டி. தியாகராயர் ஆகியோருடன் இணைந்து நிறுவப்பட்டது. சென்னை மாகாணத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த பிராமணரல்லாதோர் மாநாடுகளின் விளைவாக இக்கட்சி உருவாக்கப்பட்டது.

சென்னை மாகாணச் சமூகத்தில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிராமணர் மற்றும் பிராமணர் அல்லாதோருக்கிடையே வகுப்பு வாரியாகப் பிரிவினை ஏற்பட்டு இருந்தது. பிராமணர்கள், மொத்த மக்கள் தொகையில் தங்கள் சதவிகிதத்தை விட மிக அதிக அளவில் அரசுப் பணிகளில் இடம் பெற்றிருந்ததும், பிற சாதியினரை அவர்கள் நடத்திய விதமும் இப்பிரிவினைக்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிராமணரல்லாதோருக்கு ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க நடந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. நீதிக்கட்சியின் உருவாக்கம் இந்தத் தேவையை நிறைவேற்றுவதாக இருந்தது.

இக்கட்சி தன் ஆரம்ப ஆண்டுகளில் பிரித்தானிய ஆட்சி அதிகாரிகளிடமும் முறையிட்டு அரசுப் பணிகள் மற்றும் சட்டமன்றங்களில் பிராமணரல்லாதோருக்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பெற முயற்சி செய்தது.

மாண்டேகு செம்சுபோர்டு அரசியல் சீர்திருத்தங்களின் விளைவாக இந்திய அரசுச் சட்டம் 1919 இயற்றப்பட்டு சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு மாற்றம் ஏற்பட்டது. இந்த முறையின் கீழ் 1920 ஆம் ஆண்டு முதலில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி பங்கேற்று வெற்றி பெற்றது. 1920-37 கால கட்டத்தில் இரட்டை ஆட்சி முறையில் புரிந்த ஐந்து அரசுகளில் நான்கு நீதிக்கட்சி அரசுகளே ஆகும்.

சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி தேசியவாத இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் மாற்றாகச் செயல்பட்டது. 13 ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த நீதிக்கட்சி 1937 தேர்தலில் காங்கிரசிடம் தோல்வியைச் சந்தித்தது. பின்னர் அதனால் மீள முடியவேயில்லை. 1938 பெரியார் நீதிக்கட்சி தலைவரானார். 1944ல் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றினார். மேலும் திராவிடர் கழகம் தேர்தலில் போட்டி போடுவதை நிறுத்தினர்.

இதனை ஏற்காத ஒரு குழுவினர் "நீதிக்கட்சி" என்ற பெயரில் போட்டிக் கட்சியைத் துவங்கி 1952ல் தேர்தலில் போட்டியிட்டனர். பின்னர் இப்பிரிவு மெதுவாக செயலிழந்துவிட்டது.

நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம், பெண்களுக்கு வாக்குரிமை, இந்துசமய அறநிலைத் துறை, அரசுப்பணியாளர் தேர்வாணையம், ஆந்திரா பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்களைத் தொடங்கியும் பல சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை ஏற்படுத்தினர்.

நீதிக்கட்சி தொடங்கி வைத்த இட ஒதுக்கிடு காரணமாகவே இன்று சமூகத்தில் அரசுப் பணிகள் மற்றும் கல்வியில் அனைத்து சமூகத்தினரும் பங்கு பெற்று சமூக நீதியை அடைய இயலுகிறது. எனவே சமூக நீதியின் அடித்தளமாகவும் பிறப்பிடமாகவும் நீதிக்கட்சியே இருந்துள்ளது என்பது ஐயமின்றி தெளிவாக உள்ளது.

**கேள்வி எண் 4: 10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

உயிர்வாழ்வதற்கு அடிப்படை – உணவு வரையறை – உணவு பாதுகாப்பு – கலப்படம் - கார்போ ஹைட்ரேட்டுகள் - புரதங்கள் - கொழுப்புகள் - வைட்டமின்கள் - தாதுஉப்புகள்.

**கேள்வி எண் 5: 10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்களான பிரம்ம சமாஜம் (1828), பிரார்த்தனை சமாஜம் (1867) மற்றும் ஆரிய சமாஜம் (1875) போன்றவை ஆண் சீர்திருத்தவாதிகளால் வழிநடத்தப்பட்டன. அவர்கள் பெண்கள் சுதந்திரம் மற்றும் வளர்ச்சியில் ஒரு எல்லையை நிர்ணயித்தனர். பண்டிதரமாபாய், ருக்மாபாய் மற்றும் தாராபாய் ஷிண்டே போன்ற பெண் சீர்திருத்தவாதிகள் மேலும் அதை விரிவுபடுத்த முயற்சித்தனர். 1889இல் இந்து விதவைகளுக்காக சாரதா சதன் (கற்றல் இல்லம்) எனும் அமைப்பினை பண்டித ரமாபாய் பம்பாயில் தொடங்கினார். பின்னர் அது பூனாவுக்கு மாற்றப்பட்டது. அவரது முயற்சிகளிலேயே மகத்தானது இந்தியாவில் விதவைகளுக்கு முதன்முதலில் கல்வி புகட்ட மேற்கொண்டதாகும். மேலும் சென்னையில் பிரம்மஞான சபை (தியோசாபிகல் சங்கம்) நிறுவப்பட்டது. டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் ஐரோப்பாவிலிருந்து வருகை தந்து அவற்றில் இணைந்தார். இச்சங்கமும் பொது சமூக சீர்திருத்த திட்டத்தை உருவாக்கியது.

பெரியாரின் கருத்துக்களால் மிகவும் கவரப்பட்ட மற்றொரு சீர்திருத்தவாதி டாக்டர் S. தர்மாம்பாள் ஆவார். அவர் விதவை மறுமணத்தைச் செயல்படுத்துவதிலும் பெண்கல்வியிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். சீர்திருத்தவாதியான டாக்டர் முத்துலட்சுமி அம்மையாருடன் இணைந்து தேவதாசி முறைக்கு எதிராக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் குரல் எழுப்பினார். அம்மையார் அவர்களது நினைவாக தமிழக அரசு "மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி" திட்டத்தைத் தொடங்கியது. இந்த சமூக நலத்திட்டம் மூலம் ஏழைப்பெண்களுக்கு நிதிஉதவி வழங்கப்படுகிறது. இவ்வாறாக தங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பெண் சீர்திருத்தவாதிகளும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

**கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

1. மழை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை வழங்கிட மாவட்ட ஆட்சி தலைவரின் சார்பாக சுற்றறிக்கை ஒன்றினை வரைக.
2. அரசு அலுவலகங்களில், தனியார் நிறுவனங்களில் பெயர் பலகைகள் தமிழில் இடம்பெற அரசாணை ஒன்றை வரைக.
3. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன, அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. கண்ணும் கருத்துமாய்
2. வரவு செலவு
3. ஈடு இணையற்ற
4. உயர்வு தாழ்வு

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. தால் தாள்
2. வலம் வளம்
3. உளை உழை
4. கோல் கோள்

**c. பிரித்து எழுதுக**

1. அன்பகத்தில்லா
2. கரணத்தேர்
3. தண்ணீர்
4. தீஞ்சுவை

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. பொன்னி சோறு உண்டாள்
2. கனிமொழி நன்கு பேசுவாள்
3. நான் வீட்டுப் பாடங்களை நன்கு படித்தேன்
4. கந்தன் கல்லூரிக்குப் போவான்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
2. மதிநலன் காத்து உடள்நலம் பேனுதலே சிறப்பு
3. துண்பத்தை பொருத்துக் கொல்பவனே வெற்றி பெறுவான்.
4. உளுவார் உழகத்தார்க்கு அச்சானி போண்றவர்.

APOLLO STUDY CENTRE